நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## DVC. No.8/2024

## R.W.1 –ன் வாக்குமூலம்

**(எதிர்மனுதாரர்தரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சிவக்குமார் |
| தந்தை / கணவர் பெயர் | : | குப்புசாமி |
| கிராமம் | : | அம்மாபேட்டை |
| வட்டம் | : | சேலம் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **RW1** |
| வயது | : | 41 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், ஆகஸ்ட் மாதம், 14–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**மனுதாரர் ஆஜரில் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 3.15 PM

1. இந்த வழக்கின் 2 ம் எதிர்மனுதாரர் எனது அம்மா மற்றும் 3 ம் எதிர்மனுதாரர் எனது அக்கா ஆவார்கள். இந்த வழக்கு நடப்பது பற்றி மேற்படி 2 ம் மற்றும் 3 ம் எதிர்மனுதாரர்களுக்கு தெரியாது. நான் நடத்திவரும் பேக்கரி குடோனில் உள்ள ஒரு அறையில் நான் தனியாக வசித்து வருகிறேன். எனது அம்மா வீட்டில்

உள்ளார். அவருடன் எனக்கு பேச்சுவார்த்தை இல்லை.

2. எனக்கு திருமணமான 10 வது மாதத்தில் இருந்து எனது அக்கா மற்றும் எனது அம்மாவுடன் பேசுவதில்லை. திருமணம் ஆனபிறகு நான் சொந்தமாக பேக்கரி மற்றும் 5 ஆம்னி பேருந்துகள் வைத்திருந்தேன். Srei Equipement பைனான்சில் கடந்த 5 வருடங்கள் முன்பு வரை வேலை செய்து வந்தேன்.

3. எனக்கு தற்போது மாத வருமானம் பேக்கரியில் ரூ.25,000/– வரும். பேருந்துகளை விற்றுவிட்டேன். வேலைக்கு செல்லவில்லை. பேக்கரியில் பங்குதாரர்களாக 3 நபர்கள் உள்ளார்கள். சேலம் புதிய பேருந்து நிலையத்தில் பேக்கரி வைத்துள்ளேன். உணவுப்பொருள் பாதுகாப்புத்துறை அனுமதி பெற்றுள்ளேன். எனது கடையின் பெயர் ஸ்ரீனிவாசா பேக்கரியாகும்.

4. மேற்படி கடைக்கு வரி எதுவும் செலுத்துவதில்லை. எனது செல்போன் எண். 8778430370 ஆகும். எனது அக்காவின் செல்போன் எண். 9597700754, எனது அம்மா செல்போன் பயன்படுத்துவதில்லை. மேற்படி 5 ஆம்னி பேருந்துகளின் பதிவெண்கள் PY01C6899, PY0AB9499, TN 31 K 5139, TN 37 BK 9199 ஆகும். மேற்படி பேருந்துகளை வைத்து ST டிராவல்ஸ் என்ற பெயரில் தொழில் செய்து வந்தேன்.

5. அப்போது அந்த நிறுவனத்திற்கு நடப்பு வங்கி கணக்கு எண் வைத்திருந்தேன். கோவிட் காலத்தில் நஷ்டம் ஏற்பட்டதால் மேற்படி கம்பெனியை மூடிவிட்டேன். மேற்படி 2 பேருந்துகளை உடைப்பதற்காக 2019 ம் வருடம் விற்றுவிட்டேன். அந்த சமயத்தில் பேருந்து உரிமத்தை புதுப்பிக்க ரூ.10 இலட்சம் கேட்டதால் என்னால் புதுப்பிக்க முடியவில்லை. அப்போதே நிறுவனத்தை மூடிவிட்டேன். மீதமுன்ன 2 பேருந்துகளை கடன்கொடுத்திருந்த நிதி நிறுவனத்திற்கே கொடுத்துவிட்டேன்.

6. எனக்கு 03.06.2018 ம் வருடம் திருமணம் ஆனது. திருமணத்தின்போது எனது மனைவி B.E முடித்திருந்தார். மேல் படிப்பிற்காக JAT கல்லூரியில் ME படிப்பிற்காக ECE பிரிவில் சேர்த்திருந்தேன். எனது மனைவி ME முதலாமாண்டு

சேரும்போது எனக்கு திருமணம் ஆகிவிட்டது. திருமணம் ஆன 2–3 மாதத்தில் படிப்பதற்கான செலவிற்காக ரூ.25,000/– கொடுத்துவிட்டேன். மேலும் கொளத்தூரில் B.Ed படிக்க வைத்தேன். B.Ed படிப்பிற்கான மொத்த செலவையும் நான்தான் செய்தேன்.

7. எனது மகள் பிறந்த தேதி 05.04.2019 ஆகும். தற்போது எனது மகள் என்ன படிக்கிறார் என்று எனக்கு தெரியாது. எனது மகளை பார்க்க என்னை அனுமதிக்கவில்லை. எனது பெற்றோர் கலப்பு திருமணம் செய்துக்கொண்டவர்கள் என்றால் சரிதான்.

8. எனது மனைவி பட்டியல் சாதியினர் என்பதால் எனது அம்மாவுக்கும், அக்காவும் என் மனைவி பிடிக்காது என்றாலும் சாதி பெயரை சொல்லி திட்டினார்கள் என்றாலும் சரியல்ல. எனது தாயாரும் பட்டியல் சாதியினர்தான். நான் சொல்வது பொய் என்றாலும் அவ்வாறு பிடிக்காததால்தான் எனது மகள் பிறந்ததும் நாங்கள் தனிக்குடித்தனம் சென்றோம் என்றாலும் சரியல்ல. எங்களுக்கு குழந்தை பிறப்பதற்கு முன்பாகவே தனிக்குடித்தனமாகதான் இருந்தோம்.

9. குழந்தை பிறந்த பிறகு கூட்டுக்குடும்பாக இருந்தால் பிரச்சனை வரும் என்பதால் தனிக்குடித்தனம் சென்றதாக நான் தாக்கல் செய்த உறுதிமொழி ஆவணத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் அவ்வாறு சொல்லவில்லை. கொரோனா சமயத்தில் அதிக நஷ்டம் ஏற்பட்டதால் மனுதாரரின் நகைகளை வாழப்பாடி கூட்டுறவு சொசைட்டியில் எனது பெயரிலும், 3 ம் எதிர்மனுதாரர் கோமதி, பிரசாந்த் மற்றும் தனசேகரன் ஆகியோரின் பெயர்களில் பிரித்து பிரித்து நகைகளை அடமானம் வைத்து பணம் பெற்றேன் என்றால் சரியல்ல. ( சாட்சி முதலில் நகைகளை அடமானம் வைத்ததை ஒப்புக்கொண்டு பிறகு அதில் 6 பவுன்தான் மனுதாரருடையது என்றும், மீதமுள்ள நகைகள் தன்னுடையது என்றும் ஒருமுறை மாற்றி சொல்லிவிட்டு தற்போது மீண்டும் மாற்றி நகைகள் அனைத்தும் தன்னுடையதுதான் என்றும் அதில்மனுதாரரின் நகைகள் இல்லை என்றும் தெரிவிக்கிறார்.)

10. எனது மனைவி பெயரில் உதயா பேங்கர்ஸ் என்ற நிறுவனத்தில் என்னுடைய 2

½ பவுன் தங்கசெயினை TNPSC க்கு பயிற்சி கட்டணம் செலுத்துவதற்காக அடமானம் வைத்து வாங்கிக்கொடுத்தேன். மனுதாரர் என்னை விட்டு பிரிந்ததில் இருந்து அவருக்கோ, என்னுடைய மகளுக்கோ நான் எந்தவொரு பராமரிப்பு தொகையும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

11. மனுதாரரின் பெற்றோர்கள் வீடு கட்டுவதற்காக நான் பணம் கொடுத்தேன் என்பதற்கான ஆவணங்கள் எதுவும் என்னிடம் இல்லை.

**மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 3.45 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்து படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**